CERTIFIED
ISO 9001:2015
ISO 14001:2015
ISO 45001:2018
IS:14650 IS:1786 IS:1239 IS:4923

FOR ENQUIRIES
+91 75503 01234

# இரும்பின் குரல்

AMMAN-TRY

இது ஒரு **AMMAN-TRY**-யின் முயற்சி

திருச்சி | ஆகஸ்ட் - 2026 | 12 பக்கம் | இலவசம் | பதிப்பு 16

**AMMAN-TRY**
GROUP
BILLETS | TMT BARS | RINGS

25 YEARS 1999 - 2024




இன்ஜினீயர்ஸ் , கான்ட்ராக்டர்ஸ்
பார்பெண்டர்ஸ் மற்றும்
வாடிக்கையாளர்களுக்கான...




அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களிடம்
வாங்கும் கம்பிகளுக்கு மட்டுமே பரிசுப்பொருள் வழங்கப்படும்*

| டன் | பரிசு |
|---|---|
| 50 டன் | Cutting Machine / 32 inches TV |
| 30 டன் | Tilting Wet Grinder |
| 20 டன் | air fryer |
| 12 டன் | 2 B Glass Top Gas Stove / 26 Pcs Dinner Set |
| 10 டன் | Bullet Mixi / Angle Grinder |
| 8 டன் | Ceiling Fan / Induction Stove |
| 5 டன் | Helmets / 5L Cooker |
| 4 டன் | 3 Ltr Pressure Cooker |
| 3 டன் | Dry Iron Box / SS Hotpot |
| 2 டன் | 3 Set Lunch Box |
| 1 டன் | Water Bottle |

கொடுக்கப்பட்டுள்ள QR Code-ல் App download செய்து தங்கள் பில் விபரங்களை பதிவு செய்யவும். தாங்கள் இலக்கினை அடையும் பட்சத்தில் மேலே கொடுக்கப்பட்டுள்ள பரிசுப் பொருள்களை தாங்களே தேர்வு செய்து பெற்றுக்கொள்ளலாம்.QR Code-ல் பதிவு செய்யும் முறை பற்றி தெரிந்து கொள்ள

**அலைபேசி எண் : 93449 02020**

GREEN STEEL CERTIFIED

DEALERS FAMILY MEET

# AMMAN-TRY நிறுவனத்தின் விற்பனையாளர்கள் சந்திப்பு மூணாரில் சிறப்பாக நடைபெற்றது

AMMAN-TRY நிறுவனம் தனது அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களை ஊக்குவிக்கும் விதமாக ஆண்டுதோறும் விற்பனையாளர்கள் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்தி வருகிறது. அந்த வகையில், சென்ற ஆண்டு சிறப்பாக செயல்பட்ட விற்பனையாளர்களுக்கான சந்திப்பு **06 ஏப்ரல் 2026 முதல் 10 ஏப்ரல் 2026** வரை இரண்டு பிரிவாக சிறப்பாக நடைபெற்றது. முதல் பிரிவில் தனிநபர் சந்திப்பும், இரண்டாம் பிரிவில் விற்பனையாளர்கள் அவரவர் குடும்பத்துடனும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நிகழ்வில் நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விற்பனையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் போது நிறுவனத்தின் வளர்ச்சி, **எதிர்கால திட்டங்கள்** மற்றும் **விற்பனையாளர்களின் பங்களிப்பு** குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

நிர்ணயிக்கப்பட்ட விற்பனை இலக்கை வெற்றிகரமாக அடைந்த விற்பனையாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில் அவர்களுக்கு **தங்கநாணயங்கள் பரிசாக வழங்கப்பட்டு** கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சி விற்பனையாளர்களிடையே உற்சாகத்தையும், நிறுவனத்தின் மீதான நம்பிக்கையையும் மேலும் வலுப்படுத்தியதுடன் எதிர்காலத்தில் அதிக சாதனைகளை படைக்க ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

> **AMMAN - TRY நிறுவனம் தனது விற்பனையாளர்களின் வளர்ச்சிக்கும், அவர்களது நலன்களுக்கும் தொடர்ந்து முன்னுரிமை அளித்து செயல்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.**












# நாயுடுபேட்டை தொழிற்சாலையை பார்வையிட்ட
# 400+க்கும்
# மேற்பட்ட பொறியாளர்கள்

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 24, 25, 26 ஆகிய நாட்களில் கும்பகோணம், ஜெயங்கொண்டம், புதுக்கோட்டை, திருத்துறைப்பூண்டி, விருத்தாசலம், வேப்பூர், திருவையாறு, திருப்பத்தூர், திண்டுக்கல், லால்குடி, துறையூர், பாடலூர் மற்றும் Chennai Metropolitan Civil Engineers' Association ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட பொறியாளர்கள், நாயுடுபேட்டையில் அமைந்துள்ள AMMAN-TRY நிறுவனத்தின் அதிநவீன உருட்டாலையை பார்வையிட்டனர்.

இந்த தொழிற்சாலை பார்வையின் போது, AMMAN-TRY நிறுவனத்தில் பயன்படுத்தப்படும் ஜப்பான் KOBE HIGH SPEED BLOCK MILL TECHNOLOGY-யின் சிறப்பம்சங்கள் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. மேலும், TMT கம்பிகள் தயாரிக்க பயன்படுத்தப்படும் உயர்தர மூலப்பொருட்கள், உற்பத்தி செயல்முறைகள், LPLS முறையில் தயாரிக்கப்படும் 550D TMT கம்பிகளின் தனிச்சிறப்புகள் மற்றும் கம்பிகளுக்கு மேற்கொள்ளப்படும் பல்வேறு தரப் பரிசோதனைகள் குறித்து பொறியாளர்களுக்கு தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து Hotel Kinnera-வில் மதிய விருந்துடன் பொறியாளர்கள் சந்திப்பு கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வில் AMMAN-TRY நிறுவனத்தின் துணைத் தலைவர் திருமதி.வனிதா சோமசுந்தரம், Executive Director திரு.பசுர் நடராஜன், துணை பொது மேலாளர்கள் மற்றும் தரக் கட்டுப்பாட்டு மேலாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்கள்.

கம்பியின் தரம், தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் வாடிக்கையாளர் நம்பிக்கையை வலுப்படுத்தும் முயற்சிகள் குறித்து அவர்கள் உரையாற்றினர். நிகழ்ச்சியின் நிறைவாக, பங்கேற்ற அனைத்து பொறியாளர்களுக்கும் நினைவுப் பரிசாக Executive Bag, Brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது.

இந்த அதிநவீன தொழிற்சாலையை பார்வையிட்ட அனைத்து பொறியாளர்களுக்கும் AMMAN-TRY நிறுவனத்தின் உற்பத்தித் திறன், தரநிலைகள் மற்றும் நவீன தொழில்நுட்ப வசதிகளை நேரடியாக அறிந்து கொள்ளும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.












# கட்டுமானப் பொருட்களின் கண்காட்சி

வீடு கட்டுபவர்களுக்கு கட்டுமான பொருட்களை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தரமான கட்டுமானங்களை உருவாக்கவும் Civil Engineers-களால் தொடர்ச்சியாக பல இடங்களில் நடத்தப்படும் "கட்டுமான பொருட்களின் கண்காட்சியில்"(Build Expo) AMMAN-TRY நிறுவனம் தொடர்ந்து பங்கு பெற்று வருகின்றது.




இதில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் எங்களது Sales Team, AMMAN-TRY TMT கம்பிகளில் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் பற்றியும் கம்பிகள் தயாரிக்கும் முறை பற்றியும், LPLS முறையில் தயாரிக்கபட்ட 550 D கம்பிகளின் சிறப்பம்சங்கள் பற்றியும் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டு பின்பு அவர்களுக்கு Pen, Keychain, எங்களுடைய Brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டு வருகிறது.












| S.NO | நடைபெற்ற நாட்கள் | இடம் | மாவட்டம் |
|---|---|---|---|
| 1. | 28-02-2026 To 02-03-2026 | டெக்ஸ்வேலி, சித்தோடு | ஈரோடு |
| 2. | 08-05-2026 To 10-05-2026 | எம்.டி.பி. ஹால், KAP ரோடு, கோட்டார், நாகர்கோவில் | கன்னியாகுமரி |
| 3. | 15-05-2026 To 17-05-2026 | கொடிசியா வர்த்தக கண்காட்சி வளாகம் | கோயம்புத்தூர் |

வாஸ்து சரியானால் வாழ்க்கை செழிக்கும்




# வாஸ்து நாட்கள்

**06 மார்ச் 2026, 23 ஏப்ரல் 2026 மற்றும் 04 ஜூன் 2026 ஆகிய வாஸ்து நாட்களில் புதிய வீடு மற்றும் கட்டுமானப் பணிகளுக்காக பூமி பூஜை செய்த மக்கள் அனைவருக்கும் AMMAN-TRY சார்பாக திருவுருவப்படம் வழங்கப்பட்டது. மேலும் AMMAN-TRY TMT கம்பிகளின் தரம் பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்பட்டது.**




















எங்களது AMMAN-TRY TMT கம்பிகளை தொடர்ந்து ஆதரித்து வரும் Bar Benders, Engineers மற்றும் Builders ஆகிய அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகள்.

உங்கள் ஒத்துழைப்பும், பரிந்துரைகளும் AMMAN-TRY நிறுவனத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ளன. உங்கள் ஆதரவை பாராட்டும் விதமாக AMMAN-TRYயின் பம்பர் பரிசுத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது .

இத்திட்டத்தின் மூலம் தகுதியான பங்கேற்பாளர்கள் கவர்ச்சிகரமான பரிசுகளை வெல்லும் வாய்ப்பைப் பெறுகின்றனர். எனவே தாங்கள் அனைவரும் இந்த பம்பர் பரிசுத்திட்டத்திற்கு தொடர்ந்து ஆதரவளித்து, அதிக புள்ளிகள் சேகரித்து சிறப்பு பரிசுகளைப் பெற வாழ்த்துகிறோம்.

**AMMAN-TRY TMT BARS**
**நம்பிக்கையின் வலிமை...**
**கட்டுமானத்தின் பலம்...**











தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அனைத்துக் கட்டுமானப் பொறியாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு (FACEAT&P) சார்பில் “பொறியாளர்கள் வளர்ச்சி மாநாடு – FACECON 2026” நிகழ்ச்சி, பிப்ரவரி 24 மற்றும் 25, 2026 ஆகிய தேதிகளில் தர்மபுரியில் உள்ள ஜோதி மஹாலில் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் மாநிலம் முழுவதிலுமிருந்து கட்டுமானப் பொறியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் தொழில் முனைவோர் பங்கேற்றனர். இதில் AMMAN-TRY ன் தர கட்டுபாட்டு மேலாளர் அவர்கள் TMT கம்பிகளின் தரத்தை பற்றியும், தயாரிக்கும் முறை பற்றியும், உபயோகிக்கும் மூல பொருட்கள் பற்றியும் விளக்கம் அளித்தார். பின்பு அவர்களுக்கு Bag, Pen, Keychain, Brochure மற்றும் Catalogue வழங்கப்பட்டது






திருச்சிராப்பள்ளி பஞ்சப்பூரில், AMMAN-TRY குழுமத்தின் புதிய முயற்சியான Panjappur Food Park and Supermarket (P)Ltd 04 ஜுன் 2026 அன்று பிரம்மாண்டமாக திறந்து வைக்கப்பட்டது. ஒரே வளாகத்தில் தரமான உணவு, சிறந்த வசதிகள் மற்றும் குடும்பங்களுக்கு ஏற்ற உணவக அனுபவத்தை வழங்கும் நோக்கில் இந்த உணவுப் பூங்கா உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த வளாகத்தில் பிரபலமான மதுரை குமார் மெஸ் (Non-Veg) மற்றும் ஸ்ரீரங்கம் கஃபே (Pure Veg) ஆகிய உணவகங்கள் செயல்படுகின்றன. தென்னிந்திய மற்றும் வடஇந்திய உணவு வகைகளை ஒரே இடத்தில் உண்டு மகிழும் வண்ணம் அமையப்பெற்றுள்ளது.













நிகழ்ச்சியில் AMMAN-TRY குழுமத்தின் தலைவர் திரு. எஸ்.பி. முத்துராமலிங்கம் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. எம். சோமசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு, இனிமே துவக்கி வைத்தனர். இந்த புதிய முயற்சி பொதுமக்களுக்கு தரமான சேவையை வழங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

ஜுன் 04, 2026 வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெற்ற இந்த பிரம்மாண்ட திறப்பு விழாவில், முன்னாள் தமிழக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் K.N.நேரு, முன்னாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பொதுச் செயலாளர் திரு. வீ. கோவிந்தராஜுலு , VANDAYAR GROUP OF INSTITUTIONS தலைவர் திரு.S.குணசேகர வாண்டையார் மற்றும் தொழிலதிபர்கள், வணிகர்கள், பொதுமக்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, நிகழ்ச்சிக்கு சிறப்பு சேர்த்ததுடன், AMMAN-TRY குழுமத்தின் புதிய முயற்சிக்கு தங்களது மனமார்ந்த வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்.

திருச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பயணம் செய்பவர்களுக்கு தரமான உணவு, அத்தியாவசிய பொருட்கள் மற்றும் பல்வேறு சேவைகளை ஒரே இடத்தில் வழங்கும் மையமாக பஞ்சப்பூர் ஃபுட் பார்க் அமையும் என நிகழ்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் நலன் மற்றும் வசதியை முன்னிலைப்படுத்தி, மேலும் பல புதிய சேவைகளை அறிமுகப்படுத்த AMMAN-TRY குழுமம் தொடர்ந்து செயல்பட்டு வருவதாகவும் நிர்வாகம் சார்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




கட்டுமானத் துறையில் தரம், வலிமை மற்றும் நம்பகத்தன்மையின் அடையாளமாக திகழும் AMMAN-TRY TMT கம்பிகள், பல்வேறு அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் அங்கீகாரங்களையும் சான்றிதழ்களையும் பெற்று தனது உயர்தர உற்பத்தி தரத்தை மீண்டும் நிரூபித்துள்ளது.

AMMAN-TRY நிறுவனத்தின் உற்பத்தி மற்றும் தர மேலாண்மை நடைமுறைகள், BIS (Bureau of Indian Standards) மற்றும் ISO (International Organization for Standardization) தரநிலைகளுக்கு இணங்க செயல்படுகின்றன. இதன் மூலம் தயாரிக்கப்படும் ஒவ்வொரு TMT கம்பியும் சர்வதேச தரங்களுடன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், AMMAN-TRY TMT கம்பிகள் கீழ்க்கண்ட முக்கிய நிறுவனங்கள் மற்றும் துறைகளின் அங்கீகாரங்களை பெற்றுள்ளன

BUREAU OF INDIAN STANDARDS MARK — INDIAN STANDARDS INSTITUTION MARK

INTEGRATED MANAGEMENT SYSTEM (IMS): ISO 9001 Quality, ISO 14001 Environment, ISO 45001 Health & Safety

इस्पात मंत्रालय MINISTRY OF STEEL

NISST

CONSTRUCTION INDUSTRY DEVELOPMENT COUNCIL — TWO DECADES OF NATION BUILDING

CHENNAI METRO RAIL LIMITED

इसरो isro

LARSEN & TOUBRO

TAMILNADU PUBLIC WORKS DEPARTMENT

TAMIL NADU HOUSING BOARD

NPCC

NLC INDIA

KOCHI METRO RAIL LIMITED

INDIAN RAILWAYS

GeM Government e Marketplace

TIDCO

இந்த அங்கீகாரங்கள் அனைத்தும் AMMAN-TRY கம்பியின் தரம், உற்பத்தித் திறன் மற்றும் நம்பகத்தன்மைக்கு கிடைத்த பெருமைக்குரிய சான்றுகளாகும். அரசு திட்டங்கள் முதல் பெரிய தொழில்துறை மற்றும் உள்கட்டமைப்பு பணிகள் வரை பல்வேறு முக்கிய கட்டுமானப் பணிகளில் AMMAN-TRY TMT கம்பிகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

"தரம், நம்பிக்கை, வலிமை" என்ற கொள்கையுடன் செயல்படும் AMMAN-TRY, எதிர்காலத்திலும் உலகத் தரமான TMT கம்பிகளை வழங்கி கட்டுமானத் துறையின் வளர்ச்சியில் தொடர்ந்து பங்காற்றும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்,

**AMMAN-TRY TMT உறுதியான கட்டுமானத்தின் நம்பகமான தேர்வு!**

# 5 நட்சத்திர பசுமை எஃகு ★★★★★

AMMAN-TRY நிறுவனத்திற்கு தேசிய இரண்டாம் நிலை எஃகு தொழிற்நுட்ப நிறுவனம் (NISST) வழங்கிய 5 நட்சத்திர மதிப்பீட்டுடன் கூடிய பசுமை எஃகு சான்றிதழ், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உற்பத்தி முறைகளில் சிறந்த செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில் AMMAN-TRY நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சுற்றுச்சூழல் நட்பு உற்பத்தி, குறைந்த கார்பன் உமிழ்வு மற்றும் உயர்தர செயல்திறனுக்கான அங்கீகாரம்

5 STAR
— RATING —



GREEN
STEEL
CERTIFIED

इस्पात मंत्रालय
MINISTRY OF
STEEL
सत्यमेव जयते



- 5 ஸ்டார் பசுமை சான்றிதழ் பெற்ற இந்தியாவின் முன்னணி **TMT** கம்பி உற்பத்தியாளர்.
- குறைந்த கார்பன் ($CO_2$) , அதிக உற்பத்தி திறன் –எதிர்காலத்தை கட்டும் பசுமை தேர்வு.
- குறைந்த கார்பன் ($CO_2$) வெளியேற்றம், அதிக தரம் – பசுமை வளர்ச்சியின் சக்தி.
- **ISO 14001:2015** சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு சான்றிதழ் பெற்ற நிறுவனம்.

# ஜப்பான் KOBE BLOCK MILL தொழில்நுட்பம்

**AMMAN-TRY TMT கம்பிகளின் உலகத் தர உற்பத்தி நுட்பம்**






## மேம்பட்ட ஜப்பானிய தொழில்நுட்பம்

AMMAN-TRY TMT கம்பிகள், ஜப்பானின் முன்னணி எஃகு தொழில்நுட்பமான KOBE Block Mill Technology மூலம் தயாரிக்கப்படுகின்றன. இதன் நவீன உற்பத்தி முறை, ஒவ்வொரு கம்பியிலும் துல்லியமான அளவுகள் மற்றும் உயர்தர வலிமையை உறுதி செய்கின்றது.

## முக்கிய அம்சங்கள்

### No-Twist Rolling Technology




- கம்பியின் வடிவம் மற்றும் அளவு துல்லியமாக பராமரிக்கப்படுகிறது.
- ஒவ்வொரு கம்பியிலும் ஒரே மாதிரியான தரம்.

### அதிவேக உற்பத்தி முறை



- நவீன Block Mill அமைப்பின் மூலம் அதிக உற்பத்தி திறன்.
- தரத்தில் எந்த சமரசமும் இல்லாமல் வேகமான தயாரிப்பு.

### உயர்தர வலிமை



- சிறந்த Yield Strength மற்றும் Tensile Strength.
- கனரக கட்டுமானங்களுக்கும் ஏற்ற நம்பகத்தன்மை.

### சீரான Rib வடிவமைப்பு



- கான்கிரீட்டுடன் வலுவான பிணைப்பு.
- கட்டிடத்தின் நிலைத்தன்மையை அதிகரிக்கிறது.

### சிறந்த வளைவுத் தன்மை



- Bendability மற்றும் Weldability மேம்பட்டது.
- கட்டுமான பணிகளில் எளிதான பயன்பாடு.

## AMMAN-TRY தர உறுதி

- 100% துல்லியமான உற்பத்தி நடைமுறை
- சீரான தரக்கட்டுப்பாடு
- வலிமை, நீடித்த தன்மை மற்றும் பாதுகாப்பில் முன்னணி
- நவீன தொழில்நுட்பத்துடன் உருவாகும் நம்பிக்கையான TMT கம்பிகள்

JAPANESE KOBE BLOCK MILL TECHNOLOGY

## AMMAN-TRY வாக்குறுதி

**ஜப்பானிய KOBE Block Mill தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் AMMAN-TRY TMT கம்பிகள், ஒவ்வொரு கட்டிடத்திற்கும் அதிக வலிமை, உயர்தர பாதுகாப்பு மற்றும் நீண்ட ஆயுளை வழங்குகின்றன."**

**AMMAN-TRY TMT நம்பிக்கையின் வலிமை... கட்டுமானத்தின் அடித்தளம்!**

# சுமைதாங்கும் கட்டிடங்களில் TMT கம்பிகளின் முக்கியத்துவம்



## வலுவான கட்டிடத்திற்கு வலுவான அடித்தளம்

இன்றைய கட்டுமானத் துறையில், பாதுகாப்பு மற்றும் நீடித்த பயன்பாட்டை உறுதி செய்யும் முறைகளில் சுமைதாங்கும் கட்டுமானம் (Load Bearing Construction) முக்கிய இடத்தைப் பெறுகிறது. வீடு கட்டும் தனிநபர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் கட்டுமான நிறுவனங்கள் அனைவரும் ஒரு முக்கிய விஷயத்தை கவனிக்க வேண்டும் கட்டிடத்தின் வலிமை அதன் சுமைதாங்கும் சுவர்கள் மற்றும் அவற்றில் பயன்படுத்தப்படும் தரமான TMT கம்பிகளின் மீது அமைகிறது.

## சுமைதாங்கும் கட்டுமானம் என்றால் என்ன?

சுமைதாங்கும் கட்டுமானத்தில், கட்டிடத்தின் சுவர்கள், தளங்கள் மற்றும் கூரை போன்றவற்றின் எடையை நேரடியாக அடித்தளத்திற்கு மாற்றுகின்றன. இங்கு சுமைதாங்கும் சுவர் (Load Bearing Wall) மிக முக்கிய பங்கு வகிக்கிறது. இந்த சுவர்கள் வெறும் பிரிப்பு சுவர்கள் அல்ல; கட்டிடத்தின் மொத்த சுமையையும் தாங்கும் முக்கிய அமைப்பாக செயல்படுகின்றன. எனவே அவற்றின் வலிமையை அதிகரிக்க தரமான TMT கம்பிகள் அவசியமாகின்றன.

## சுமைதாங்கும் கட்டிடங்களின் எடுத்துக்காட்டுகள்

| பாரம்பரிய செங்கல் கட்டிடங்கள் | தனி வீடுகள் மற்றும் டூப்ளெக்ஸ் வீடுகள் | குறைந்த மாடி வணிகக் கட்டிடங்கள் | கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புற வீடுகள் |
|---|---|---|---|
|  |  |  |  |

இவ்வகை கட்டிடங்களில் TMT கம்பிகள் கட்டிடத்தின் முதுகெலும்பாக செயல்பட்டு பாதுகாப்பையும் நிலைத்தன்மையையும் வழங்குகின்றன.

## AMMAN-TRY TMT கம்பிகள் தரத்தில் முன்னோடி

உயர்தர உற்பத்தி முறைகளில் தயாரிக்கப்படும் AMMAN-TRY TMT கம்பிகள், கட்டிடங்களுக்கு அதிக பாதுகாப்பு, நீடித்த தன்மை மற்றும் நம்பகத்தன்மையை வழங்குகின்றன.
வீடு முதல் வணிகக் கட்டிடம் வரை அனைத்து வகை கட்டுமானங்களுக்கும் சிறந்த தேர்வாக அமைகின்றன.

STRENGTH
SAFETY
TRUST

## ஏன் TMT கம்பிகள் அவசியம்?

நவீன தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்படும் TMT கம்பிகள் அதிக இழுவை வலிமை (Tensile Strength) மற்றும் நெகிழ்வுத்தன்மை (Ductility) கொண்டவை. இதனால் கட்டிடத்தின் மீது ஏற்படும் அழுத்தங்களையும் அதிர்வுகளையும் திறம்பட தாங்க முடிகிறது.

## TMT கம்பிகளின் முக்கிய நன்மைகள்

- அதிக வலிமை மற்றும் சுமைதாங்கும் திறன்
- நிலநடுக்க எதிர்ப்பு தன்மை
- துருப்பிடிப்பு எதிர்ப்பு
- கான்கிரீட்டுடன் சிறந்த பிணைப்பு
- நீண்ட ஆயுள் மற்றும் குறைந்த பராமரிப்பு செலவு




## முடிவுரை

ஒரு கட்டிடத்தின் நீண்ட ஆயுளும் பாதுகாப்பும் அதன் சுமைதாங்கும் அமைப்பின் வலிமையைப் பொறுத்தது. தரமான TMT கம்பிகளை பயன்படுத்துவதன் மூலம் கட்டிடத்தின் உறுதி, பாதுகாப்பு மற்றும் நீடித்த தன்மையை பல மடங்கு உயர்த்தலாம்.


**’வலுவான கட்டிடம் வேண்டுமா?**
**தரமான AMMAN-TRY TMT கம்பிகளைத் தேர்வு செய்யுங்கள்!’**

AMMAN-TRY
GROUP
BILLETS | TMT BARS | RINGS

# AMMAN-TRY
GROUP
BILLETS | TMT BARS | RINGS

25 YEARS OF TRUST




## AMMAN-TRYன் நேரடி விற்பனை மையங்கள்

## வாடிக்கையாளர் நம்பிக்கையால் வேகமான வளர்ச்சி

தமிழகத்தில் வணிகத் துறையில் வேகமாக முன்னேறி வரும் AMMAN-TRY, தனது நேரடி விற்பனை மையங்களை நான்கு முக்கிய நகரங்களில் விரிவுபடுத்தியுள்ளது. கம்பியின் தரம், நியாயமான விலை மற்றும் வாடிக்கையாளர் திருப்தி என்ற மூன்று முக்கியக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. நேரடி விற்பனை மையங்கள் மூலம் இடைநிலை செலவுகளை குறைத்து, பொருட்களை நியாயமான விலையில் துரிதமாக வழங்கும் முயற்சியில் AMMAN-TRY தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

### 1 PANJETTY DEPOT

Chennai Area @ Panjetty
(Gummidipoondi Highway)

AMMAN-TRY Retail Blakmet Private Limited
SF No. 199/1 & 199/2, Ponneri Town,
Panjetty, Tiruvallur - 601204
96775 12233
depot@ammantry.in

### 2 HOSUR DEPOT

AMMAN-TRY Retail Blakmet Private Limited
53, Agraharam Village, Rayakottai Road,
Opp. G.P.T Petrol Bunk,
Hosur - 635109, Tamil Nadu
99655 23302, 98424 13342
hosurdepot@ammantry.in

### 3 COIMBATORE DEPOT

AMMAN-TRY Retail Blakmet Private Limited
484/2A, Muthalipalayam Road,
Arasur, Near Kanavedam Kovil,
Coimbatore - 641407
98424 13358, 99655 13320
covaidepot@ammantry.in

### 4 PONDICHERRY DEPOT

AMMAN-TRY Retail Blakmet (P) Ltd.
5A, East Pondy Main Road,
Kandamangalam West,
Villuppuram District - 605102
97916 22231
pondydepot@ammantry.in

PREMIUM QUALITY TMT BARS | TRUST & RELIABILITY | TIMELY DELIVERY & BEST SERVICE | STRONGER BUILDINGS STRONGER FUTURE

## AMMAN-TRY STEELS PVT LTD.,

No. 15 & 16, Mannarpuram Main Road, Mannarpuram
Trichy – 620 020. For Support +91 75503 01234

CERTIFIED ISO 9001:2015 ISO 14001:2015 ISO 45001:2018
IS:14650 IS:1786 IS:1239 IS:4923

Join our Whatsapp Channel

info@ammantry.com www.ammantry.com Follow us...